# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 33 June- 2020 Issue - 6


ஆசிரியர் உரை

## போதும் கர்த்தாவே... இப்பொழுதே என்னைக் கொன்றுபோடும்.

இத்தலைப்புக்கான கட்டுரையை நான் எழுத ஆரம்பித்த போது, என் நினைவுகள் என்னை ஒரு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பாக இழுத்துச் சென்றது. நான் பள்ளிச் சிறுவனாக வளர்ந்த நாட்களில், எங்கள் பகுதியில் வாழ்ந்த பெரியவர்கள், சில சந்தர்ப்பங்களில் இப்படியாகச் சொல்லக் கேட்டது என் நினைவில் வந்து நிழலாடியது. ''**அட, ஆளைக்கண்டு மயங்காதே, ஊது காமாலை** என்று அதாவது, ஓர் ஆளுடைய வெளித்தோற்றத்தை வைத்து, அவன் பற்றிய ஒட்டுமொத்த காரியங்களை எடைபோட்டு விடாதே என்பதே அதன் பொருள். இப்பொருளைச் சார்ந்து மேலுள்ள தலைப்பை நீங்கள் அணுக வேண்டுகிறேன். ஆம், தலைப்பிலுள்ள **வார்த்தைகளைக் கண்டு மிரளாதே, அவை நம்மை பயமுறுத்தாதவை.** இந்த உண்மையை நீங்கள் ஏற்றுக் கொண்டு, கொரோனா பீதியில் ஊரும், உலகமும் உறைந்து போயிருக்கும் இந்நாட்களில் இப்படியொரு தலைப்பா என்று எண்ணி என்னை வசைபாடாமல் தொடர்ந்து வரும் பக்கங்களுக்குள்ளாகப் பயணிக்க வேண்டுகிறேன்.

இப்பூலோக வாழ்வில் திருப்தியும், அதிருப்தியும் தவிர்க்க முடியாதவைகள் என்பதை நாமறிவோம். விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் இந்த இரண்டு நிலைகளை நாம் மாறி மாறி எதிர்கொண்டு தான் ஆக வேண்டும். அப்படிப்பட்ட சந்தர்ப்பங் களில் நமது திருப்தியைத் தெரிவிக்க ஒரு வார்த்தையையும்,

அதிருப்தியைத் தெரிவிக்க வேறொரு வார்த்தையையும் பயன் படுத்துவோம். ஆனால், தலைப்பில் உள்ள **போதும்** என்னும் தமிழ்ச்சொல், திருப்திக்கும் அதிருப்திக்கும் ஒரு சேரப் பொருந்துகிற ஒன்றாக உள்ளது. எப்படியெனில், உணவு பரிமாறப்படும் போது, சம்பந்தப்பட்டவரின் முகத்தைப் பார்த்துப் **போதும்** என்று சொன்னால், அவன் மூக்கு முட்டச் சாப்பிட்டு திருப்தியாகிவிட்டார் என்று பொருள். அதே வேளையில், ஒருவனை வேறொருவன் ஏடாகூடமாக ஏசும்போது, சம்பந்தப் பட்டவன் அவனை முறைத்துப் பார்த்துப் **போதும்** என்று சொன்னால், அவன் கடும் அதிருப்தியில் இருக்கிறார் என்று பொருள்படும். அப்படித்தானே! இப்பொருளின் அடிப்படையில், நமது தலைப்பில் உள்ள **போதும்** என்னும் வார்த்தையும், அதைத் தொட்டு வரும் பிற வார்த்தைகளும் கடும் அதிருப்தியின் குமுறல்களாகவே கொட்டப்பட்டுள்ளது.

தடித்த வார்த்தைகளைக் கொண்ட இம்மாதத் தலைப்பு நம் கண்ணில் பட்டவுடனே அவை நம்மையும் கேட்காமல் நம் மனதிற்குள் புகுந்து ஒருவித அச்சம் கலந்த தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும். ஏன் இந்தத் தலைப்பு என்ற வினாவோடு, வேதாகமத்தில் இப்படிச் சொன்னது யார்? அல்லது யார், யார்? என்ற கேள்வியும் சேர்ந்து கொள்ளும். பொதுவாக, நம் கவனத்தை ஈர்த்து சிந்தையைக் கிளரும் ஒரு வார்த்தை அல்லது ஒரு வாக்கியம் அது யாரிடமிருந்து வருகிறது என்பதைப் பொறுத்து அதற்கான வலிமை கூடும் அல்லது குறையும். நம் தலைப்பில் உள்ள வார்த்தைகளை வெளிப்படுத்தியவர்கள் சாதாரண மானவர்கள் அல்ல. கடந்த பல நூற்றாண்டுகளாக உலகெங்கிலு முள்ள ஒட்டு மொத்த கிறிஸ்தவ சமுதாயத்தால் பெரிதும் மதிக்கப் பட்டு உரக்கப் பேசப்பட்டு வருபவர்கள். தேர்ந்த தேவ பக்திக்கும், சர்வ வல்லவருடனான ஒப்பற்ற உறவுக்கும் எடுத்துக்காட்டாகத் திகழ்பவர்கள். இவர்களைப் பற்றியெல்லாம் எழுதுவதற்கு எனக் கென்ன தகுதியிருக்கிறது என்ற எண்ணத்தை ஏந்தியவனாகவே இக்கட்டுரையைத் தொடர்கிறேன்.

இவர்கள் வேறு யாருமல்ல, பழைய பிரமாணங்களின் தந்தையாகிய **மோசே தாசன்** மற்றும் தீர்க்கதரிசிகளின் ஒட்டுமொத்த பிரதிநிதியாக மறுரூபமலைக் காட்சியில் இயேசு வோடு காட்சி தந்த தீர்க்கன் **எலியா.** நம்ப முடியவில்லையா? இவர்களிருவரும் இப்படியாப் பேசியது சரியாகத்தான் இருக்கும்

என்று வக்காலத்து வாங்குவது இக்கட்டுரையின் நோக்கமல்ல. மாறாக, இப்பழுத்த பக்திமான்கள் அதிருப்தியின் உச்சத்திற்கும், விரக்தியின் விளிம்பிற்கும் சென்று பொரிந்து தள்ளிய சூடான வார்த்தைகளுக்குப் பரலோக தேவனுடைய பதில் என்னவாக இருந்ததென்பதை எடுத்து விளக்கும் ஒரு முயற்சி. அவ்வளவே!

கோவிட்–19 என்னும் தீநுண்கிருமி உலகைத் தாக்கி வரும் இக்காலகட்டத்தில், நம்மில் அநேகரும் கூட கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக, மனதளவில் நம்மை பாதிக்கும் கடும் சூழ்நிலைகளுக்கு உள்ளாகி அருப்தியுடனும், விரக்தியுடனும் இன்னும் சொல்லப்போனால், **இது என்னடா வாழ்க்கை** என்ற வெறுப்புடனும் வாழ்ந்து கொண்டுள்ளோம். ‘‘இவை முதலான வைகளையல்லாமல், எல்லாச் சபைகளைக் குறித்தும் உண்டா யிருக்கிற கவலை என்னை நாள்தோறும் நெருக்குகிறது (II கொரி 11:28) என்று கூறி பவுலடியார் கவலைப்படுவதுபோல, நாமும் ஒட்டு மொத்த சபையாகக் கூடி வந்து ஆவிக்குரிய பெலனையும், சரீர வாழ்வுக்கான நம்பிக்கையையும் பெற்றுப் பல வாரங்கள் ஓடி விட்டதால், சரீரப் பிரகாரமான சங்கடங்களோடு ஆவிக்குரிய அச்சமும் சேர்ந்து கொண்டது.

இப்படி எல்லாவகைளிலும் எதிரான மனநிலையின் உச்சத்தில் தத்தளித்துக் கொண்டிருக்கும் நமக்கு, பழைய ஏற்பாட்டின் காலத்தில் அதிருப்தியிலும், விரக்தியிலுமிருந்த பக்திமான்களுக்குத் தேவன் எப்படிப் பதிலளித்து, ஆற்றித் தேற்றி, பெலப்படுத்தி, வழிநடத்தினார் என்பதை அறியும்போது எதிர்வரும் நாட்களையும், எஞ்சியுள்ள காலங்களையும் நாம் நம்பிக்கையோடு கழிக்க ஏதுவுண்டாகும். இவைகளை மனதில் கொண்டே இம்மாதத் தலைப்பு தெரிவு செய்யப்பட்டுள்ளது. இப்பொழுது புரிகிறதா?

சரி, இப்பொழுது மோசே, எலியா போன்றவர்களின் வாழ்க்கைச் சம்பவங்களைக் கிட்டப்போய்ப் பார்த்து நமக்கான பாடங்களைக் கற்றுக்கொள்ள முயற்சிப்போம்.

**I இப்பொழுதே என்னைக் கொன்று போடும் – மோசே**

முதலாவது, மோசேயின் குமுறலுக்குக் காரணமாயிருந்த சம்பவத்திலிருந்து கொரோனா காலக் கலக்க நிலையிலிருக்கும் நமக்குக் கிடைக்கும் பாடம் என்னவென்று கவனிப்போம்.

பழைய ஏற்பாட்டு இஸ்ரவேல் ஜனங்களின் அவல நிலைக்கு பல காரணங்கள் உண்டு. அவைகளுள் ஒன்று அவர்களின் அர்த்தமற்ற **முறுமுறுப்பு.** தேவனுக்கு பிடிக்காத குணம் இது. ஆயினும், அவர்கள் கடைசி வரைக்கும் திருந்தவே இல்லை. அப்படி, ஒரு முறுமுறுப்பு சம்பவம் ஒன்றை நாம் எண்ணாகமம் 11-ம் அதிகாரத்தில் காண முடியும். அங்கே இஸ்ரவேலின் **முறையிடுதல் நிமித்தம்** கர்த்தருடைய அக்கினி பற்றி எரிந்து பாளையத்தின் கடைசியிலிருந்த சிலரைப் பட்சித்துப் போட்டது (11:1). இந்த எச்சரிப்பிலிருந்து அவர்கள் **பாடம் கற்றுக்கொண்டு** தேவனுக்கும், தேவ மனிதன் மோசேக்கும் விரோதமாகப் பேசுவதை நிறுத்தியிருக்க வேண்டும். ஆனால், நிறுத்தவில்லை. திருந்தாத ஜென்மங்கள். இறைச்சி வேண்டுமென்று அழ ஆரம்பித்தார்கள். அத்தோடு நிறுத்தாமல், ''இப்பொழுது நம்முடைய உள்ளம் வாடிப்போகிறது'' என்று புலம்பினார்கள் (11:6). தேவன் தந்த தூதர்களின் உணவாகிய இந்த மன்னா (சங் 78:25) இவர்களுக்கு அற்பமாக இருந்துள்ளது. என்ன பிறவிகளோ?

அடுத்த கட்டமாக, அந்தந்த வம்சங்களைச் சேர்ந்த ஜனங்கள் கூடார வாசலில் நின்று ஒப்பாரி வைக்கவும் செய்தார்கள். இதினிமித்தம் கர்த்தருக்கு மிகவும் கோபம் மூண்டது. (11:11) ஒன்றாம் வசனத்தில் இஸ்ரவேலர் முறையிட்டபோது, **கோபப்பட்ட தேவன்,** இங்கு ஏகமாய் அழுகிறதைக் கண்டு **மிகவும் கோபம் கொள்கிறார்.** கிடைக்கும் எச்சரிப்பிலிருந்து பாடம் கற்றுக் கொண்டு திருந்த வேண்டியவர்கள் திருந்தாத போது கர்த்தர் மிகவும் கோபப்படுகிறார் என்பது நம் நினைவிலிருக்கட்டும். இஸ்ரவேலரின் இச்செயலைக் கண்டு மோசே அதிர்ந்து போனான். இனி இந்த ஜனங்களோடு காலம் தள்ளுவது இயலாத காரியம் என்பதை உணர்ந்தவனாய், கர்த்தரை நோக்கி அடுக்கடுக்கான கேள்விகளை எழுப்பினான்.

- **ஜனங்கள் எல்லாருடைய பாரத்தை என்மேல் சுமத்த உமது அடியானுக்கு உபத்திரவம் வரப் பண்ணினதென்ன? (வ. 11).**
- **உம்முடைய கண்களில் எனக்குக் கிருபை கிடையாமற் போனதென்ன? (வ. 11).**
- **இந்த ஜனங்களையெல்லாம் கர்ப்பந்தரித்தேனோ? (வ. 12).**

- **ஜனங்கள் எல்லாருக்கும் கொடுக்கிறதற்கு எனக்கு இறைச்சி எங்கிருந்து வரும்?** (வ. 13).
- **இவர்களைப் பெற்றது நானோ** (வ.12).
- **எனக்கு மிஞ்சின பாரமாயிருக்கிறது!** (வ.14)

இப்படிக் குமுறிக்கொட்டி விட்டுத்தான், **....என் உபத்திரவத்தை நான் காணாதபடிக்கு இப்பொழுதே என்னைக் கொன்று போடும்**'' என்று மன்றாடினான். அதிருப்தியும், விரத்தியும் மன அழுத்தமும் ஒருவனை ஒருசேர அமுக்கும்போது, அவனை அது எந்த எல்லைக்குக் கொண்டு போகிறது என்று பாருங்கள்! தேர்ந்த தேவ மனிதனாகிய மோசேயே தாக்குபிடிக்க முடியாமல் தடுமாறிவிட்டான்.

ஆயினும், அவருடைய உண்மைப்பிள்ளைகளாக அவருக்கு ஒப்புக்கொடுத்து நாம் வாழும்போது, தேவன் நம்மை இப்படிப்பட்ட மனநிலையில் தொடர்ந்து நாட்களைக் கழிக்க அனுமதிப்பதில்லை. பூமியெங்கும் உலாவுகிற கண்களைக் கொண்டிருக்கும் நம் பரலோக தேவன் நம் சூழ்நிலைகளை கவனித்து, நம் வியாகுலங்களைக் கண்டு உடனடியாக உதவிக்கரம் நீட்டுகிறார். ஆம், அவர் தான் நம் தேவன். அடுத்த வசனத்தைப் பாருங்கள், ''**அப்பொழுது கர்த்தர் மோசேயை** நோக்கி : என்றுள்ளது. ஆம், தேவன் அங்கு எந்தத் தாமதமும் செய்யவில்லை. உடனடியாக அவனுடைய பிரச்சனையில் தீர்வுக்கு வழிவகுத்தார். எழுபது பேரைக் கூட்டி வந்து ஆசரிப்புக் கூடாரத்தில் வந்து நில்! நான் இறங்கி வந்து, அங்கே உன்னோடே பேசி, **நீ ஒருவன் மாத்திரம் ஜனங்களின் பாரத்தைச் சுமக்காமல், உன்னோடே கூட அவர்களும் அதைச் சுமப்பதற்காக உன் மேல் இருக்கிற ஆவியை அவர்கள் மேலும் வைப்பேன்** (எண் 11:17) என்றார். மிஞ்சின பாரமாயிருக்கிறது என்னால் முடியவில்லை என்று சொன்ன மோசேக்கு, இங்கே 70 பேரைக் கொடுக்கிறார். ஒரு ஆள் சுமந்ததை இப்பொழுது 70 பேர் சுமக்கப் போகிறார்கள். சர்வ வல்லவர் மோசேயின் சூழ் நிலையில் இரக்கம் பாராட்டிக் காட்டின கரிசனையைக் கவனியுங்கள். மோசேயின் பாரம் இப்படியாக இலகு வாக்கப்பட்டது.மோசேயின் குமுறலுக்கு விடிவும் வந்து சேரந்தது

அருமையானவர்களே! தன்னால் தாங்க முடியாத ஒரு பிரச்சனைக்கு மோசே கண்ட தீர்வுக்கும், தேவன் கொடுத்த தீர்வுக்குமான வேறுபாட்டைப் பாருங்கள். ஆம், நம் தேவன் நம்முடைய சூழ்நிலைகளைக் கவனித்து அவருடைய ஞானத்தின்படியாகவும், திட்டத்தின்படியாகவும்பிரச்சனைகளைத் தீர்த்து வழிநடத்த வல்லவராக இருப்பதால், நாம் எந்தச் சூழ்நிலையிலும் எனக்கு மிஞ்சின பாரமாயிருக்கிறது என்று சோர்ந்து போகாமல், தேவக் காரியங்களில் உண்மையும், உறுதியுமாக இருந்து சர்வ வல்லவரின் வழிநடத்துதலுக்கு ஒப்புக்கொடுத்து வாழ்வோம். **உன் நம்பிக்கை வீண்போகாது என்று சொல்லும் நம் தேவன், இப்பூலோக வாழ்வின் பாரங்கள் எதுவாக இருந்தாலும் இலகுவாக்கி நம்மை வழிநடத்தும் வல்லவராக இருக்கிறார்.**

## II **போதும் கர்த்தாவே, என் ஆத்துமாவை எடுத்துக்கொள்ளும் – எலியா**

இரண்டாவது, எலியாவின் புலம்பலுக்குக் காரணமாயிருந்த சம்பவத்திலிருந்து, கொரோனா காலத் தடுமாற்றத்தில் இருக்கும் நமக்குக் கிடைக்கும் பாடம் என்னவென்று கவனிப்போம்.

எலியா பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளில் தனித்து நிற்பவர். மண்ணில் பறக்கும் காகங்களாலும், விண்ணில் பறக்கும் தூதர்களாலும் போஷிக்கப்பட்டவர் (Iஇராஜ 19:48). இவரின் ஏராளமான சிறப்புகளுக்கு மகுடமாக இருப்பது உயிரோடே **சுழல்காற்றிலே பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.** (II இராஜ 2:1-15). இந்த எலியா தன் தீர்க்கதரிசின ஊழியத்தின் நாட்களில் ஆகாப் ராஜாவுக்குத் தன்னை வெளிப்படுத்தி அதைத் தொடர்ந்து, பாகாலின் தீர்க்கதரிசிகளோடு, கர்த்தரா? பாகாலா? யார்? உண்மை என்பதற்கான ஒரு போட்டிக்கு ஏற்பாடு செய்யப்பட்டு ஒரு பெரும் வெற்றியை ஈட்டினார். அங்கே, தேவ கட்டளையின்படி (உபா 18:20) பாகாலின் தீர்க்கதரிசிகள் அனைவரும் வெட்டப்பட்டு மடிந்தார்கள். எலியாவின் இச்செயலுக்கு பழிவாங்குவேன் என்று கங்கணம் கட்டிக் கொண்ட ஆகாப் ராஜாவின் மனைவி யேசபேல், எலியாவைக் கொலை செய்யத் தீவிரித்தாள். (19:1-2). இதைத் தெரிந்து கொண்ட எலியா, பெயர்செபாவுக்குப் புறப்பட்டு அங்கிருந்து ஒரு நாள் பிரயாணமாய் போய், ஒரு சூரைச்செடியின் கீழ் உட்கார்ந்து, தான் சாகவேண்டுமென்று கோரி, **போதும் கர்த்தாவே,**

**என் ஆத்துமாவை எடுத்துக் கொள்ளும்,** நான் என் பிதாக் களைக் பார்க்கிலும் நல்லவன் அல்ல என்றான் [I ராஜ 19:11].

இப்படித் தன் மனச்சோர்வு, விரக்தி, வெறுப்பு ஆகியவற்றை வெளிப்படுத்திவிட்டு, அதே சூரைச் செடியின் கீழ்படுத்து நித்திரை செய்தான். கர்த்தருக்காகப் பேசினேன். கர்த்தருக்காகச் செயல் பட்டேன் இதினால் எனக்கு என்ன பலன் கிடைத்தது என்று எலியா தன்மனதுள் எண்ணியதின் விளைவுதான், போதும் கர்த்தாவே என்னை எடுத்துக் கொள்ளும் என்ற விரக்திப்பேச்சு. அநேக சமயங்களில் நாமும் கூட கர்த்தருக்காக வைராக்கியமாய் வாழ்ந்து, பாடுகளைச் சகித்து, பொறாமைகளையும், அச்சுறுத்தல்களையும், நோய்களையும், இழப்புகளையும் எதிர்கொள்ளும்பொழுது, இந்த சூரைச் செடி எலியா போலவே சிந்திக்கிறோம். பேசுகிறோம். இப்படிப்பட்ட நேரங்களில், **உங்கள் கிரியையும், நீங்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ் செய்ததினாலும், செய்து வருகிறதினாலும் தமது நாமத்திற்காகக் காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும் மறந்துவிடுகிறதற்கு தேவன் அநீதியுள்ளவரல்லவே** [எபி 6:10] என்னும் தேவ வார்த்தைகள் கொரோனா கிருமியைப் போல் நம் கண்ணுக்கு ஏனோ தெரிவதில்லை.

ஆயினும், எலியாவின் சூழ்நிலையில் பரலோக தேவனின் அணுகுமுறையைப் பாருங்கள். அப்பொழுது **ஒரு தூதன்** அவனைத்தட்டி யெழுப்பி **எழுந்திருந்து போஜனம் பண்ணும்** என்றார் [வ:5]. அதன் பிறகு, இன்னும் தன் சோர்விலிருந்து விடுபடாத நிலையில் **இரண்டாந்தரம் தேவ தூதன் வந்து, எழுந்திருந்து போஜனம் பண்ணு; நீ பண்ண வேண்டிய பிரயாணம் வெகுதூரம் என்றான்** [வ:7]. ஆம், நம் தேவன் அவருடைய பிள்ளைகள் தொடர்ந்து சோர்விலும், விரக்தியிலு மிருக்க விரும்புவதில்லை. எப்படியெல்லாம் பெலனையும், நம்பிக்கையையும் கொடுக்க வேண்டுமோ அப்படிக் கொடுக்கிறார். எல்லாம் முடிந்தது; இனி இந்த ஆத்துமா இருந்து என்ன பயன் என்று எலியா நினைத்த நேரத்தில் **எலியாவே நீ பண்ண வேண்டிய பயணம் வெகுதூரம்** என்று சொல்லுகிறார். கர்த்தர் நமக்காக வைத்திருப்பவைகளை அநேக சமயங்களில் நாம் புரிந்து கொள்வதில்லை. சூரைச்செடி எலியாபோலவே நடந்து கொள்ளுகிறோம். தப்பு, தப்பு, தப்பு!

இதன் பிறகு எலியா தேவன் தந்த பெலத்தால், ஓரேப் மலைக்குப் போய் அங்குள்ள ஒரு கெபியில் ஒளிந்து கொள்கிறார். போய் வேலையைப் பாருன்னு சொன்னபிறகு மறுபடியும் சோர்வு. எலியாவே, இங்கு உனக்கு என்ன வேலைன்னு கேட்ட போது, **கர்த்தரின் தீர்க்கதரிசிகள் எல்லோரையும் கொன்று போட்டார்கள். நான் ஒருவன் மாத்திரம் மீதி என்றான்** (வ.10). ஏதோ, உலகம் இவன் உள்ளங்கையில் இருப்பதுபோல் **எல்லாம் தெரிந்தவனாகத் தன்னை எண்ணி, ஏதும் அறியாதவனாக** இருந்த எலியாவுக்கு கர்த்தரின் பதிலைப் பாருங்கள். **பாகாலுக்கு முடங்காதிருக்கிற முழங்கால்களையும், அவனை முத்தஞ் செய்யாதிருக்கிற வாய்களையுடைய ஏழாயிரம் பேரை இஸ்ரவேலிலே மீதியாக வைத்திருக்கிறேன்** என்றார் (20:18). அங்கே மோசே, எனக்கு இது மிஞ்சின பாரம் என்ற போது 70 பேரைத் தந்த தேவன். இங்கே, **நான் ஒருவன் மாத்திரம்** என்ற போது, 7000 பேரைக் காட்டுகிறார். அங்கே மோசயின பாரத்தைப் பகிர்ந்து கொள்ள 70 பேர். இங்கே எலியாவோடு இசைந்து ஊழியம் செய்ய 7000 பேர். போதுமா ? போதாதா?

அருமையானவர்களே! அவரை நம்புகிறவர்களுக்கு தேவன் இதைவிட என்ன செய்ய வேண்டும்? அட, என்னதான் செய்ய வேண்டும்? சொல்லுங்கள். நம்முடைய அறிவின்படியாகவும், நம்முடைய கணக்கின்படியாகவும் காரியங்கள் நமக்கு நடக்க வேண்டுமென்று நினைக்காமல், தேவ வழிநடத்துதல் ஒப்பற்றது, நம்முடைய அறிவுக்கு எட்டாதது என்பதைச் சிரம் தாழ்த்தி ஏற்றுக்கொண்டு, நாம் கடந்து சென்று கொண்டிருக்கும் கொரோனா காலச்சூழல் எப்படிப்பட்ட சவாலை நம் வாழ்வில் ஏற்படுத்தினாலும் கிஞ்சித்தும் அஞ்சாமல் நம் பரலோக பயணத்தைப் பாங்காய் தொடருவோம். **நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவது மில்லை** (எபி.13:5) என்று வாக்குரைத்த நம் தேவன் நம்மோடு கூட இருக்கிறார்! அவர் அப்படியே இருப்பார்!! ஆமென் !!!

✝

***ஒரு முறை பிறப்பவன் இரண்டு முறை சாகிறான்***
***இரண்டு முறை பிறப்பவன் ஒரு முறை சாகிறான்***

# தேவ வார்த்தைகளோடு நீங்கள் வாதம் செய்ய முடியாது

Bro. J.C. **சோட்**

இன்றைய நாட்களில் வாழும் மக்களில் சிலர் தங்கள் நம்பிக்கை, நடைமுறைச் சூழ்நிலை போன்றவைகளுக்குப் பொருந்தும் விதமாக, தேவனுடைய வார்த்தையின் ஒரு பகுதியை மட்டும் விரும்புகிறார்கள். இந்தச் செயல்பாடானது, தேவனுடைய வார்த்தையின் ஒரு பகுதியை ஏற்றுக் கொண்டு மற்றவைகளை நிராகரிக்க வழிவகுக்கிறது. அவர்கள் தேவனுடைய வார்த்தை யோடு வாக்குவாதம் செய்யவும், அதற்கு விளக்கமளிக்கவும் முயற்சிக்கிறார்கள். இச்செயல் பரிசுத்த எழுத்துககளை பரிசுத்தக் குலைச்சலாக்குவதாகும்.

வேத வாக்கியங்களில் உள்ள முழுச் சத்தியமும் நமக்குத் தேவையாயிருக்கிறது. வேத வாக்கியங்களில் நமக்கான தேவனுடைய சித்தம் என்ன என்பதை முழுமையாக அறிந்து கொள்ள வேண்டும். நாம் குறைவான சத்தியத்திற்கல்ல, முழுமையான சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, அதை மற்றவர் களுக்குப் போதிக்க வேண்டும். தேவனுடைய வார்த்தையின் ஏதோ ஒரு பகுதியை இது எனக்கானதல்ல என்று அதைக் கண்டு கொள்ளாமல் அதை நிராகரித்தால் அது எவ்விதத்திலும் ஏற்புடையது அல்ல. அதாவது, பாதி உண்மை போதுமானதல்ல.

அதேவேளையில், இரட்சிக்கப்பட ஒருவர் செய்ய வேண்டிய தெல்லாம், விசுவாசிப்பது மட்டும்தான் என்று போதிக் கிறவர்களும் இருக்கிறார்கள். இதற்கு ஆதாரமாக, யோவான் 3:16; 3:36; 5:2; அப் 16:31 போன்ற வசனங்களைப் பயன் படுத்துகிறார்கள். இது சம்மந்தமாக மற்ற வசனங்கள் என்ன போதிக்கின்றன என்பதைக் கருத்தில் கொண்டு, இதை மட்டும் தான் தேவன் எதிர்பார்க்கிறார் என்னும் விவாதம் ஏற்படலாம். ஆனால், விசுவாசம் அவசியமா என்னும் விவாதம் தேவை யில்லை. இந்த வேத வாக்கியங்கள் எல்லாம் ஒருவர் இரட்சிக்கப் பட விசுவாசிக்க வேண்டும் என்றுதான் போதிக்கின்றன. அதே சமயம், ஆத்தும இரட்சிப்பு என்று வரும்போது இந்த வசனப் பகுதிகளை மாத்திரம் நாம் ஆதாரமாக எடுத்துக் கொள்ளக் கூடாது. **விசுவாசத்தினாலே மாத்திரம்** என்னும் உபதேசத்திற்கு ஆதரவாக, இவ்வசனப் பகுதிகளைப் பயன்படுத்துவார்கள், இவைகளைத் தனிமைப்படுத்தி விட்டார்கள். அநேகமாக அவர்கள் விசுவாசத்தின் அர்த்தத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் அதற்கென ஒரு எல்லை வகுத்திருக்கிறார்கள்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஒருவர் மனந்திரும்ப வில்லை என்றால் அப்படியே கெட்டுப்போவார்கள் என்று சொல்லுகிறார் [லூக்கா 3:3]. இந்தக் கருத்தை வலியுறுத்தும் விதமாக அப்போஸ்தலன் பவுல், எங்குமுள்ள மனிதர்கள் மனந்திரும்ப வேண்டுமென்று தேவன் கட்டளையிட்டிருக்கிறார் என்றார் [அப்.17:30]. இப்படி மனந்திரும்புதலுக்கான அவசியத்தை வலியுறுத்திப் போதிக்கும் வசனங்கள் ஏராளமாக உள்ளன. இதினிமித்தம், ஒருவர்தான் இரட்சிக்கப்பட வேண்டு மென்றால், தன பாவங்களிலிருந்து மனந்திரும்புவதுதான் மிக முக்கியமாகச் செய்யப்பட வேண்டிய காரியம் என்ற முடிவுக்கு வர வேண்டும். அதே நேரத்தில், மற்றொருவர் இரட்சிப்புக்கு இதை விட ஒருவர் அதிகமாகச் செய்ய வேண்டுமென்று வாதாடக் கூடும். இது விவாதமாக இருந்தாலும், வாக்குவாதமாக இருந்தாலும், தேவைப்படாத ஒரு கருத்து என்னவென்றால், ஒரு பாவி தன் பாவங்களிலிருந்து இரட்சிக்கப்பட வேண்டுமென்றால் அவர் முழுமையாக மனந்திரும்ப வேண்டும்.

வேதாகமத்தில் பல வசனங்கள் ஞானஸ்நானத்தின் அவசியத்தை வலியுறுத்துகின்றன [அப்.22:16; ரோமர் 6:3]. இதன் பொருள் ஞானஸ்நானம் மாத்திரம் தான் ஒருவரை இரட்சிக்கிறதா? அப்படியானால் விசுவாசம் அவசியமில்லையா? மனந்திரும்புதல் தேவையில்லையா? போன்ற கேள்வி களெல்லாம் கேட்கப்பட்டு விவாதிக்கப்பட்டாலும் ஒருவர் தேவனுடைய சித்தத்தின்படி மேற்சொல்லப்பட்ட ஒட்டுமொத்த சத்தியத்தையும் ஏற்றுக் கொள்ளுகிறதாக இருந்தால் ஞானஸ் நானத்தின் அவசியம் பற்றி எந்தச் சந்தேகமும் ஏற்படாது. அப்போஸ்தலனாகிய பேதுரு பெந்தகொஸ்தே நாளிலே ஜனங்களை நோக்கி நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும், பாவ மன்னிப்புக் கென்று ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள் என்று சொன்னார் [அப்.2:38]. இங்கே விசுவாசத்தைப் பற்றி கேட்கப்பட்ட கேள்வி அவர்கள் ஏற்கனவே விசுவாசித்தார்கள் என்பதைத் தான் காட்டுகிறது. நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொரு வரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். இங்கே விவாதம், வாக்குவாதம் செய்வதற்கு ஒன்றுமே இல்லை. நாம் செய்ய வேண்டியதெல்லாம் சுவிசேஷத்தை அப்படியே ஏற்றுக் கொள்ளுவதுதான்.

நாம் இரட்சிப்பின் திட்டம் என்னும் பாடத்தைப் படித்தாலும் சரி, அல்லது வேறு ஏதாவது பாடத்தைப் படித்தாலும் சரி வேதாகமப் பாடத்தை படிக்கும்போது, அதில் ஒவ்வொரு வசனத்திலுள்ள எல்லாச் சத்தியத்தையும் ஏற்றுக் கொள்ளும் மனநிலையில் நாம்

அதை அணுக வேண்டும். இதினிமித்தம் நாம் ஒவ்வொருவரும் வாக்கியத்திலுள்ள எல்லாக் கட்டளைகளையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த உறுதியான நிலைப்பாடுதான் கிறிஸ்துவுக்குள் நம்மை வெற்றி சிறக்கப் பண்ணும்.

நிச்சயமாகவே, நம் கர்த்தர் எல்லாச் சத்தியத்தையும் எல்லா சுவிசேஷ கட்டளைகளையும் ஒரே வசனப்பகுதியில் தரவில்லை. ஆகவே, நாம் ஒரு வேதாகமப் பாடத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள ஒன்றிரண்டு வசனங்களிலே நின்று விடாமல், தொடர்ந்து தேவனுடைய வார்த்தைகள் எல்லாவற்றையும் வாசித்து அதிலுள்ள சத்தியத்தை ஒருங்கிணைக்க வேண்டும். அப்படிச் செய்வதின் மூலமாகவே தேவன், நம்மிடமிருந்து என்ன எதிர் பார்க்கிறார் என்பதைக் காணமுடியும். மேலும், எல்லா சத்தியத்தையும் நாம் விசுவாசித்து அதற்கு கீழ்ப்படிவதின் மூலமாகத்தான் இரட்சிக்கப்பட முடியும். இதில், விவாதத்திற்கோ வாக்குவாதத்திற்கோ வழியே இல்லை.

நாம் ஏற்கனவே ஏற்றுக் கொண்ட ஒரு நம்பிக்கையில் நிலைத்திருக்கும்படியாக சத்தியத்தை நிராகரிக்கும் நிலைக்கு ஒரு போதும் தள்ளக் கூடாது. நாம் அப்படியொரு நிலைக்குத் தள்ளப்பட்டால் நம் வாழ்வை நாம் வீணாக்கி, தேவனுடைய வார்த்தையில் ஒரு பகுதியை நிராகரித்து நித்திய நித்தியமாக நம் ஆத்துமாவை இழந்துபோவோம். அதினிமித்தம் மனிதன் பெருமைக்காகவும், பிடிவாதத்திற்காகவும் கொடுக்கும் விலைதான் என்ன?

ஆகவே, நாம் நம் ஆண்டவருடைய வார்த்தைகளை நினைத்துக் கொள்வது மிகவும் முக்கியமானது. என்னைத்தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிற தொன்றிருக்கிறது. நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும். நான் சுயமாய் பேசவில்லை, நான் பேச வேண்டியது இன்னதென்றும், உபதேசிக்க வேண்டியது இன்ன தென்றும் என்னை அனுப்பின பிதாவே எனக்குக் கட்டளை யிட்டார். அவருடைய கட்டளை நித்திய ஜீவனாயிருக்கிற தென்று அறிவேன்; ஆகையால், நான் பேசுகிறவைகளைப் பிதா எனக்குச் சொன்னபடியே பேசுகிறேன் என்றார் (யோவான் 12: 48-50).

தேவனுடைய சத்தியத்தை நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே மாற்றாதபோது, நிச்சயமாக, எந்த ஒரு மனிதனும் அப்படிப்பட்ட காரியத்தைச் செய்யத் துணியமாட்டான். ✝

பெண்கள் பகுதி

# உபத்திரவத்தில் என் நிலை!

Sis. ரேச்சல் இராஜநாயகம்

**கி**றிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே! கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் உங்களுக்கு வாழ்த்துதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். கிறிஸ்தவர்களாகிய நாம் நம்மைப் பார்த்து ஒரு கேள்வியைக் கேட்டுக்கொள்ள வேண்டும். என்னை யாராவது அச்சுறுத்தினால் அல்லது என் பிள்ளைகள் அச்சுறுத்தப்பட்டால் நான் கிறிஸ்தவத்தை மறுதலிக்காமல் நிற்பேனா? இதற்கு யாருமே உண்மையான பதிலைக் கூறுவது கடினம். பிரச்சனை வந்தால் தான் உண்மை நிலை தெரியும். ஆனால், கொரோனா காலம் உட்பட எச்சூழ்நிலையிலும் முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களைப் போல் தைரியமாக இருக்கப் பழகுவோம்.

இன்றைக்கு, நாம் போகிறபோக்கில் கிறிஸ்தவர்களாக இருக்கிறோம். பொருளாதார ரீதியிலும், சரீரப் பிரகாரமாகவும், ஆவிக்குரிய வகையிலும் பாதிப்பு இல்லாமல் இருக்கிறோம். பெரியளவில் சவுகரியம் இருந்தால் ஆராதிக்கலாம் இல்லையேல் விட்டுவிடலாம் என்ற நிலையில் தான் நாம் இன்று இருக்கிறோம். நிறைய புத்தகங்கள், பத்திரிக்கைகள், ஒத்த வாக்கியங்கள், வேதாகம விளக்கவுரைகள், இன்னும் இணையதள வசதி அப்படி, இப்படியென்று பல சாதனங்கள் நமக்கு சுலபமாகக் கிடைக்கின்றன. இவைகள் எல்லாம் எதை நமக்குக் காட்டுகிறதென்றால், தேவனுடைய அளவில்லாத அன்பு, பரலோகத்திலுள்ள பூரண சற்குணராகிய தேவன் தன் பிள்ளைகளாகிய நம்மேல் பொழிந்தருளும் ஆசீர்வாதங்கள்.

பெரிய பாடுகள் இல்லாமல் கிறிஸ்தவர்களாக இருக்கும் நமக்கு, தேவன் கொடுக்கும் எச்சரிப்பை சற்று கவனிப்போம். பாலும், தேனும் ஓடுகிற கானான் தேசத்தை இஸ்ரவேல் மக்கள் சுதந்தரிப்பதற்கு முன்பாக தேவன் கொடுத்த எச்சரிப்பைப் பாருங்கள்.

**ஆகையால், நீ புசித்துத் திருப்தியடைந்திருக்கையில், உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுத்த அந்த நல்ல**

**தேசத்துக்காக அவரை ஸ்தோத்திரிக்கக்கடவாய். உன் தேவனாகிய கர்த்தரை மறவாதபடிக்கும், நான் இன்று உனக்கு விதிக்கிற அவருடைய கற்பனைகளையும் கைக்கொள்ளாமற் போகாத படிக்கும் எச்சரிக்கையாயிரு. நீ புசித்துத் திருப்தியாகி, நல்ல வீடுகளைக் கட்டி, அவைகளில் குடியிருக்கும்போது , உன் ஆடுமாடுகள் திரட்சியாகி; உனக்கு வெள்ளியும், பொன்னும் பெருகி, உனக்கு உண்டானவையெல்லாம் வர்த்திக்கும் போதும், உன் இருதயம் மேட்டிமையடையாமலும், உன்னை அடிமைத்தன வீடாகிய எகிப்திலிருந்து புறப்படப்பண்ணின வரும், உன்னுடைய பின் நாட்களில் உனக்கு நன்மை செய்யும் பொருட்டு, உன்னைச் சிறுமைப்படுத்தி, உன்னைச் சோதித்து, கொள்ளிவாய்ச் சர்ப்பங்களும், தேள்களும், தண்ணீரில்லாத வறட்சியுமுள்ள பயங்கரமான பெரிய வனாந்திரவழியாய் உன்னை அழைத்து வந்தவரும், உனக்காகப் பாறையான கன்மலை யிலிருந்து தண்ணீர் புறப்படப்பண்ணின வரும்..... உன்னை போஷித்து வந்த வருமான உன் தேவனாகிய கர்த்தரை நீ மறவாமலும் இருக்க எச்சரிக்கையாயிரு....** (உபா. 8:10-17).

கடந்த காலங்களில் தேவன் இஸ்ரவேல் ஜனங்களுக்குக் கொடுத்த இந்த எச்சரிப்பை இக்காலக் கிறிஸ்தவர்களுக்கும் சொல்ல வேண்டியதாயிருக்கிறது. தேவனுடைய வார்த்தைக்குப் பதிலாக மனித கோட்பாடுகள் வெகுவாகப் போதிக்கப்படுகின்றன. வேதாகமம் ஏதோ ஒழுக்க நெறிகளைக் கற்றுக்கொள்ள உதவி செய்யும் புத்தகம் போல் பயன்படுத்தப்படுகிறது. ஒன்றான மெய்சபை, இரட்சிப்புக்கேற்ற போதனை, புதிய ஏற்பாட்டின் படியான ஆராதனை முறை, போன்ற உபதேச காரியங்கள் உண்மையாகக் கடைபிடிக்கப்பட்டாலும், உறுதியாகச் சொன்னால் பிறர் மனம் புண்பட்டுவிடும், பெலவீனமான அங்கத் தினர்களும் பின் வாங்கி விடுவார்கள் என்று உண்மையை உரக்க கூறாமல் அமைதி காக்கும் பழக்கம் இன்று வேகமாகப் பரவி வருகிறது. மேலும், உபதேசத்தை அடக்கி வைத்து, பிறரோடு ஒத்துப்போய், பிரிவினை சபையரோடு பட்டும்படாமல் கலந்து எல்லோரும் விசுவாசிகள் தானே என்று எண்ணும் நிலையும் காணப்படுகிறது.

இத்தகைய மௌனம் பல கிறிஸ்தவர்கள் வேத அறிவைக் கொஞ்சம் கொஞ்சமாக இழந்து, வசனத்திற்காக நிற்பது என்றால் என்ன என்பதே தெரியாத நிலையையும் நம் பார்க்க முடிகிறது. இன்னமும் பார்த்தால் கிறிஸ்தவர்கள் உலகத்தின் மேல் ஆசை வைத்து பொருளீட்டுதல், வாழ்க்கையை

அனுபவிப்பதே இலக்கு என்றும், உல்லாசமான வாழ்க்கை, பிள்ளைகளை உல்லாசமாக வாழவிடுதல் போன்றவைகளுக்கு அடிமைகளாகி விடுகிறார்கள். இதுதவிர கணவன், மனைவி ஆகிய இரண்டு பேரும் வாரம் முழுவதும் வேலை, வேலை என்று அலைந்து, பிள்ளைகளை நடந்த வேண்டிய வழியிலே நடத்தாமல், உறுதியான கிறிஸ்தவக் குடும்பமாகக் கட்ட முடியா மல் காலத்தைக் கழிக்க வேண்டிய நிலை எங்கும் காணப் படுகிறது. நமதாண்டவராகிய இயேசுகிறிஸ்து விதைக்கிறவன் உவமையிலே கூறும்போது, **இப்படிப்பட்டவர்கள் தங்களுக் குள்ளே வேர்கொள்ளாதபடியால் கொஞ்சகாலம் மாத்திரம் நிலைத் திருக்கிறார்கள், வசனத்தினிமித்தம், உபத்திரவமும், துன்பமும் உண்டானவுடனே இடறலடைகிறார்கள்; இவர்களே கற்பாறை நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள் என்று** மாற்கு 4:17 ல் கூறுகிறார். இது இன்றும் பொருத்தக் கூடியதாகவே உள்ளது.

புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவர்கள் தாங்கள் ஏற்றுக்கொண்ட சுவிசேஷத்தை உலகம் முழுவதும் எடுத்துச்செல்ல வேண்டிய பொறுப்புடன், அதற்கேற்ப தங்கள் விசுவாசத்தையும், வாழ்க்கை முறைகளையும் அமைத்து வாழ்ந்தனர். அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் சபை வளர்ந்த விதத்தை நாம் காணமுடியும். வாரத்தின் முதல் நாளுக்கு அத்துணை முக்கியத்துவம் கொடுத்தார்கள். ஏற்றுக்கொண்ட சத்தியத்தோடு ஒன்றையும் கூட்டவும் இல்லை, குறைக்கவுமில்லை. பாடுகள், உபத்திரங்கள் மத்தியில் தங்கள் உயிரையும் பொருட்டாக எண்ணாமல் சுவிசேஷத்திற்காக வாழ்ந்தார்கள். அப்போஸ்தலனாகிய பவுலுடைய வைராக்கிய பிரயாணங்களை நாம் பார்க்க முடியும்.

அதாவது, ஆத்தும ஆதாயப் பணியை சிரசின்மேல் ஏற்றுக்கொண்டு சபையைப் பெருக்கினார்கள், தங்களிடத்தில் உள்ளதை ஊழியத்திற்காகக் கொடுத்தார்கள், எந்த எதிர்பார்ப்புமின்றி ஊழியப் பணி தொடரப்பட்டது. தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளை சபை காரியத்தில் ஈடுபட வைத்தார்கள், கூடி ஜெபித்தார்கள், தீமோத்தேயு, தீத்து போன்ற இளைஞர்கள் பவுலுக்குக் கீழ்ப்படிந்து ஊழியப் பணி செய்தார்கள், ஆக்கில்லா பிரிஸ்கில்லா போன்றவர்கள் ஊழியக்காரரை ஆதரித்து, அனுசரித்து அவர்களைத் தங்களோடு இணைத்து ஊழியத்தை ஊக்கப்படுத்தினார்கள், லூக்கா என்ற மருத்துவர் பவுலோடு சேர்ந்து பவுலின் பெலவீனங்களை தாங்கி எப்படியாவது சுவிசேஷம் பரவ வேண்டும் என்று எண்ணினார்கள், சுயநலத்தை விரும்பி வாழாமல் சுவிசேஷம் பரவுவதே இலட்சியம் என்று

வாழ்ந்தார்கள், தங்களோடிருந்தவர்களே எதிர்த்தபோதிலும் சோர்ந்துபோகாமல் பசியிலும், பட்டினியிலும், சவாலான பயணங்களிலும் மழையிலும், வெய்யிலிலும், சிறையிலும் இப்படி பலபாடுகளைப் பட்டு சபையை வளர்த்தார்கள். முதல் நூற்றாண்டு கிறிஸ்துவின் சபையைச் சேர்ந்த நாம் இன்று எப்படி வாழ்ந்து கொண்டிருக்கிறோம்? கிறிஸ்துவின் உயிர்தெழுதலை, சிலுவையின் உபதேசத்தை முதலாவது நாம் விசுவாசித்து அதை கிரியையில் காட்டுகிறோமா?

இதை வாசிக்கும் அருமையான தாய்மார்களே! சிந்திப்போம். கிறிஸ்துவுக்காகவும், அவர் இரத்தம் சிந்தி சம்பாதித்த சபைக்காகவும் பாடுபடுவதில் நான் எங்கே இருக்கிறேன்? என் நிலை என்ன? என்பதைச் சிந்தித்து செயல்படுகிற கிறிஸ்தவப் பெண்களாக இருப்போம். தீமோத்தேயுக்களை உருவாக்கும் ஐனிக்கேயாள், லோவிசாள் போன்றவைகளை நாம் மாதிரியாக வைப்போம். எப்போதும் நம்மைப் பற்றியே சிந்தியாமல் கர்த்தருடைய காரியங்களையே சிந்திப்போம்,. அதற்காக செயல் படுவோம்! தேவன் தாமே அதற்கு உதவி செய்வராக! ஆமென். ✝

## வேதத்தில் வாரத்தின் முதல் நாள்

- **வாரத்தின் முதல் நாள்** கிறிஸ்து கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்தார் (மத்.28:1-7).
- **வாரத்தின் முதல் நாள்** பரிசுத்த ஆவியானவர் இறங்கினார் (அப்.21:1-14).
- **வாரத்தின் முதல் நாள்** சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டது (அப்.2).
- **வாரத்தின் முதல் நாள்** சபை ஸ்தாபிக்கப்பட்டது (அப்.2:38-47)
- **வாரத்தின் முதல் நாள்** அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடினார்கள் (அப்.20:7)
- **வாரத்தின் முதல் நாள்** காணிக்கை கொடுக்க கட்டளை பெற்றிருந்தார்கள் (கொரி. 16:1,2)
- **வாரத்தின் முதல் நாள்** சபை கூடிவருதலை விட்டு விடக் கூடாது ( எபி.10:25).

வாலிபர் பகுதி

# ஆவியின் கனியாகிய அன்பு

Dr. ஏபில் நாயகம்

**தே**வனுடைய பரிசுத்தமான நாமத்தில் வாலிபர்களாகிய உங்களுக்கு வாழ்த்துக்கள். தேவனுடைய வார்த்தைகளின் துணையோடு உங்களோடு உரையாடுவது எனக்கு மிகவும் மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. சரீர இச்சைகளை ஒழிப்பதோடு மட்டும் நம் வேலை முடிவதில்லை. ஆவியின் கிரியைகளில் எப்படிப் பெருகி வளருவது என்பதில் நம் கவனம் எப்பொழுதும் இருக்க வேண்டும்.

நம் தேவன் அன்பாகவே இருக்கிறார் (I யோவான் 4:8 ). ஆனால் அன்பு என்றால் என்ன? ஒரு கிறிஸ்தவனுடைய அன்பின் நிலைப்பாடு என்ன? தேவனிடத்திலும் சக மனிதர்களிடத்திலும் எப்படி அன்புகூர வேண்டும்? என்ற கேள்விகளுக்கு வேதத்தின் துணையோடு நாம் பதில்களைத் தேடுவோம்.

II கொரி. 13:11 ல்– அன்பிற்குக் காரணமாக தேவன் இருக்கிறார் என்று வாசிக்கிறோம். அவர் அன்பின் பிறப்பிடமாகவே இருக்கிறார். அந்த தேவன் அவருடைய அன்பை நம் மீது காட்டியிருக்கிறார். ரோமர் 5:8ல் **நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே , தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்க பண்ணுகிறார்** என்று வாசிக்க முடியும். சற்றும் தகுதியில்லாத நம்மேல் அந்த அன்பை விளங்கப் பண்ணினார். ஒருவன் தன் சிநேகிதருக்காக தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமாக முழுமையான உச்ச கட்ட அன்பைத்தான் தேவன் நம்மீது காட்டினார். நமக்காக மரித்ததினாலே தேவனின் குமாரனாகிய கிறிஸ்துவும் அவ்வன்பை வெளிப்படுத்தினார்.

தேவனிடமிருந்தும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவினிடமிருந்தும் வந்த அன்பை ருசி பார்த்த நாம் அந்த அன்பை நம் வாழ்வில் எப்படிப் பிரதிபலிக்கிறோம்? எபேசியர் 5:21நீங்களும் அன்பிலே நடந்து கொள்ளுங்கள் என்று பவுல் கூறுகிறதை வாசிக்கிறோம். தேவனும் நாம் அவரைப் போலவே அன்பைப் பிரதிபலிக்கிற பிள்ளைகளாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்.

கொலோ 3:12-14 ல் பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக் கொள்ள வேண்டும் என்று பரிசுத்த ஆவியானவர் கொலேசே சபையை உற்சாகப்படுத்துகிறார். Iகொரி 16:14ல் **உங்கள் காரியங்களெல்லாம் அன்போடே செய்யப் படக்கடவது** பிரியமான வாலிபர்களே இன்னும் அநேக வசனங்களை நாம் வாசிக்கலாம். ஆனால், நாம் நம்மை கேட்டுக்கொள்ள வேண்டிய ஒரு கேள்வி நாம் செய்கிற ஒவ்வொரு காரியத்திலும் உண்மையான அன்பு இருக்கிறதா?

நாம் செய்கிற காரியங்களில் அன்பு இருக்கிறதா? என்ற கேள்வியின் அர்த்தம் என்ன? தேவனுடைய அன்பை கிரியைகளில் வெளிப்படுத்துவதாகும். தேவனுடைய நாமத்தை உச்சரிப்பதால் அவர் அன்பை பிரதிபலிக்கிறவர்களாக நாம் மாறி விட முடியுமா? உரத்த சத்தமாய் பாடுவதும், ஆடல் பாடல்களோடு ஆராதனை செய்வதும், தேவனுடைய அன்பை நாம் கிரியைகளில் வெளிப்படுத்துவதாகும். தேவனுடைய நாமத்தை உச்சரிப்பதால் அவர் அன்பை பிரதிபலிக்கிறவர்களாக நாம் மாறி விடமுடியுமா? உரத்த சத்தமாய்ப் பாடுவதும், ஆடல், பாடல்களோடு ஆராதனை செய்வதும், தேவனுடைய அன்பை நாம் பிரதிபலிக்கப் போதுமானதாக இருக்குமா?

யோவான் 14:15 ல், நீங்கள் அன்பாய் இருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள் என்று வாசிக்கிறோம். அப்படியென்றால், எதைச் செய்கிறோமோ இல்லையோ, அவருடைய கற்பனைகளான வசனங்களை நாம் நிச்சயம் கைக் கொண்டாக வேண்டும்.

நாம் தேவனுடைய அன்பினாலும் கிறிஸ்துவின் அன்பினாலும் நிலைத்திருக்க வேண்டுமானால் கற்பனைகளைக் கைக்கொள்ள வேண்டும். கிறிஸ்துவும் பிதாவின் அன்பிலே கற்பனைகளை செய்வதன் மூலம் நிலைத்திருந்தார் ( யோவான் 15:10). கற்பனைகளை கைக்கொள்ள முதலாவது கற்பனை களைக் கற்றுக்கொள்ள வேண்டும். அநேக வாலிபர்கள் தவறாமல் ஆராதனைக்குச் செல்லும் பழக்கம் உள்ளவர்களாக இருப்பார்கள். ஆனால், தேவனுடைய வசனங்களைக் கற்று கொள்வதில் மிகவும் பின்தங்கி இருப்பார்கள். தேவனுடைய வசனங்களை, அவருடைய கற்பனைகளைத் தெரிந்து கொள்ளாமல், யாராலும் அதைக் கைக்கொள்ள முடியாது. கைக் கொண்டு நிறை வேற்றாமல் அவருடைய அன்பை நம்மால் பிரதிபலிக்க முடியாது. ஆக, நாம் கிறிஸ்துவுக்கு சிநேகிதராக மாற அவருடைய கற்பனைகளைக் கற்று பின் அதைக் கைக்கொள்ள வேண்டும்.

Iயோவான் 4:20–21 ல், தேவனுடைய அன்பை நாம் நம் வாழ்வைப் பிரதிபலிக்க வேண்டுமானால் தேவனுடைய கற்பனைகளைக் கற்று அவைகளுக்குக் கீழ்ப்படிந்து சகோதரரே நாம் சிநேகிக்க வேண்டும் மற்றும் அவர்களிடத்தில் அன்பு கூர வேண்டும். ஒருவேளை, நீங்கள் இந்தக் கற்பனைகளைக் நிறைவேற்றுபவராக இருந்தால் மகிழ்ச்சி. ஆனால் நிறை வேற்றாதவராக இருந்தால், கவனமாகச் சிந்தியுங்கள். Iயோவான் 3:16–18 ல் சரீர தேவையிலிருக்கும் சகோதரருக்கு நாம் உதவ வேண்டும். ஆவிக்குரிய வகையில், ஒரு சகோதரன் வழிவிலகிப் போனால். அவரை அணுகி, தப்பிப்போன மார்க்கத்தினின்று அவர்களைத் திருப்பவேண்டும். இதைச் சாந்தமுள்ள ஆவியோடு செய்ய வேண்டும்.

பிரியமான வாலிபர்களே! நாம் ஒவ்வொருவரும் ஆவியின் கனிகளைக் கொடுக்கிறவர்களாகவும், அதில் வளருகிறவர் களாகவும் இருக்க வேண்டும். தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதின் மூலமாகவும், சகோதர்களை நேசிப்பதின் மூலமாகவும் தேவனுடைய அன்பை நம் வாழ்வில் பிரதிபலிக்க முடியும். அதன் மூலம் தேவனுடைய நாமம் மகிமைப்படும். இம்முயற்சியில் வெற்றி பெற தேவன் நமக்கு உதவி செய்வாராக! ஆமென். ✝

---

**நாம் ஒன்றுக்கும் கவலைப்படாமல் தேவனிடம் நம் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான மிகச் கிறந்த காரணங்களுள் ஒன்று நாம் வாழ்நாள் முழுவதும் முயற்சி செய்தும் முடிக்காமல் இருக்கும் காரியங்களை நாம் முழங்காலில் நிற்பதால் தேவன் சில நிமிடங்களில் முடித்துவிடுகிறார்.**

சிறுவர் பகுதி

# பொய் சொல்லுதல்!

Dr. பிரெய்ஸி

**ஹா**ய் குட்டீஸ்? எப்படி இருக்கீங்க..?

**தா**னியேல் போல தினமும் மூன்று வேளை ஜெபிப்பீர்கள் என நம்புகிறேன். இம்மாதம், பொய் சொல்லுதலை தேவன் எப்படிப் பார்க்கிறார் என்று கவனிக்கப் போகிறோம்.

முதலாவது, எனக்கு அன்பான சிறு பிள்ளைகளே, நாம் பொய் சொல்லும்போது அது சிறியதாக இருந்தாலும், பெரிதாக இருந்தாலும் தேவன் மிகவும் அதிருப்தி அடைகிறார். இது குறித்து அப்போஸ்தலர் 5:1–11 வசனங்களில் பார்க்க முடியும். முதலாவது இந்த வேதப் பகுதியைப் படித்துவிட்டு, பிறகு இக்கட்டுரையைத் தொடர்ந்து படியுங்கள்.

இந்த வேத பகுதியில், அனனியாவும், சப்பீராளும், தாங்கள் விற்ற நிலத்தின் கிரயத்தில் பொய் சொன்ன மாத்திரத்தில் இறந்து போனார்கள். அந்நாட்களில், கிறிஸ்தவர்களாயிருந்தவர்களுக்கு சொந்தமாக நிலபுலங்கள் இருந்தது. அந்நிலங்களை அவர்கள் தங்களுடையதாகக் கருதாமல், தேவனுடையதாக எண்ணி, தேவையிலிருப்பவர்களுக்குக் கொடுக்கும்படியாக அதை விற்று அப்போஸ்தலர்களிடம் கொடுத்தார்கள் (அப்.4:35).

ஆனால், அனனியாவும், சப்பீராளும் தங்களுடைய நிலம் தேவனால் கொடுக்கப்பட்டது என்னும் உண்மையை மறந்து, நிலத்தை விற்று, அதில் ஒரு பகுதியை மறைத்து, எஞ்சியதை அப்போஸ்தலர்களிடம் கொண்டு வந்து, **இவ்வளவுக்குத்தான் விற்றோம்** என்று பொய் சொன்னார்கள். அவர்கள் தங்கள் வஞ்சகச் செயலை தேவன் மேலே இருந்து கவனிக்கிறார் என்பதையும், பேசுகிற பொய்யை தேவன் கேட்கிறார் என்பதையும் மறந்து போனார்கள். இதினிமித்தம் தேவன் அவர்களைத் தண்டித்தார்.

ஆகையால், நம்மிடத்தில் இருப்பதெல்லாம் தேவன் நமக்குக் கொடுத்தவைகள் என்பதை நாம் மறவாமல், அவருக்குக் கொடுப்பதில் உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும். சிறு பொய்யாக இருந்தால் கூட தேவன் பொய்யை வெறுக்கிறார். ஆகவே, நாம் சிறு வயதிலிருந்து பொய் பேசாமல் இருக்கப் பழகி உண்மையே பேசி, சரியானதையே செய்ய வேண்டும். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக! – ஆமென்

**அன்புடன், உங்கள் பிரெய்ஸி அக்கா.** ✝

# ஏன் இப்படிப் பயப்பட்டீர்கள்?

G.J. **பிரபுதாஸ்**

**முகவுரை:**

**ப**யம் என்ற வார்த்தைக்கான பொருள், எதிர்வரும் ஆபத்து, வலி போன்றவைகளை எண்ணுவதால் ஏற்படும் ஒரு விருப்பத்தகாத உணர்வு. பயம் என்னும் வார்த்தை Dellos என்னும் கிரேக்க வார்த்தையை ஆதாரமாகக் கொண்டது. இதற்கான நேரடிப் பொருள் **பயமுறுத்தும், பயம்** அல்லது **நம்பிக்கையற்ற** என்பது.

**விவாதம்:**

I. **இயேசு கடுங்காற்றை அமைதிப்படுத்தினார்** (வ –35–39)

A. கலிலேயாக் கடல் – உலகம்
B. படகு – இவ்வுலகில் நம் வாழ்க்கை
C. கடுங்காற்று – நாம் சந்திக்கும் இன்னல்கள் (கோவிட் – 19....)
D. சீடர்கள் – கிறிஸ்தவர்கள்
E. பயம் – அவிசுவாசம்
F. இயேசு – இரட்சகர்
G. பெரிய அமைதி – தேவனுடைய பாதுகாப்பு

II. **அற்ப விசுவாசமுள்ளவர்கள் பயப்படுவார்கள்** (வ.38 –40)

A. உமக்குக் கவலையில்லையா? – I பேதுரு 5:7)
இயேசுவை சந்தேகித்தல்
B. நாங்கள் மடிந்து போகிறோம் – (யோவான் 3:16)
இயேசுவில் அவநம்பிக்கை
C. ஏன் உங்களுக்கு விசுவாசம் இல்லாமல் போயிற்று?

III. **அவர்கள் மிகவும் பயந்தார்கள்** (வ.41)

A. இவர் யாரோ?
B. தங்களுக்குள் சொல்லிக் கொண்டார்கள்
C. காற்றும், கடலும் அவருக்கு கீழ்ப்படிகிறது.

முடிவுரை

- ☞ அற்ப விசுவாசிகளே – (மத்.8:26)
- ☞ விசுவாசம் இல்லாதவர்களே – (மத்.4:40)
- ☞ உங்கள் விசுவாசம் எங்கே ? – (லூக். 8:25).

☞ நீங்கள் விசுவாசமுள்ளவர்களோ என்று உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள். உங்களை நிங்களே பரீட்சித்துப் பாருங்கள். இயேசு கிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறாரென்று உங்களை நீங்களே அறியீர்களா? நீங்கள் பரீட்சைக்கு நில்லாதவர்களாயிருந்தால் அறியீர்கள் (II கொரி 13:15).

☞ நீங்கள் மிகவும் பயப்படுகிறீர்களா? கவலைப்படாதீர்கள். கர்த்தர் உங்களோடு இருக்கிறார் (மத். 28:20).

✝

## விசுவாசத்தின் வகைகள்

1. **அற்ப விசுவாசம் (மத்தேயு 8:26)**
2. **மாபெரும் விசுவாசம் (மத்தேயு 8:10)**
3. **பெலவீனமான விசுவாசம் (ரோமர் 14:1)**
4. **செத்த விசுவாசம் (யாக்கோபு 2:26)**
5. **பூரணமான விசுவாசம் (யாக்கோபு 2:22)**

# போதுமென்கிற மனது

Bro. **பென்னி மார்ட்டின்**

பிரியமானவர்களே! போதுமென்கிற மனது எனும் தலைப்பைப் பார்த்தவுடனே கொரோனா போன்ற இந்த போதாத காலத்தில் போதுமென்கிற மனதைப் பற்றி கட்டுரை எழுதுகிறீர்களே, உங்களுக்கு ஏதாவது போதவில்லையா என்று நீங்கள் கேட்கக் கூடும். பணப்பசி நிறைந்த இவ்வுலகில் யாராவது ஒருவரிடம் போய் உங்கள் வாழ்க்கை எப்படி இருக்கிறது? உங்களிடம் இருக்கிறவைகள் போதுமென்று நினைக்கிறீர்களா? உங்களுக்குக் கிடைக்கும் வருமானம் போதுமானதாக இருக்கிறதா என்று கேட்டால் போதும் உங்கள் பேச்சை நிறுத்திக் கொள்ளுங்கள் என்று சொல்வார்கள். போதுமென்கிற மனதை வேறுவிதமாக திருப்திப்படுதல் என்று சொல்லலாம். இவ்வுலகில் மக்கள் திருப்தியாக இருக்கிறார்களா, அதிருப்தியாக இருக்கிறார் களா என்பதைக் குறித்து பட்டித்தொட்டிகளிலெல்லாம் பட்டிமன்றங்களே பல நடந்துள்ளன. பொதுவாக மனித மனம் விண்ணை முட்டும் கட்டடங்களை கட்டினாலும் சரி மண்ணைத் தோண்டி கனிம வளங்களை கபளீகரம் செய்தாலும் சரி, திரைகடல் ஓடி திரவியங்களை சேர்த்தாலும் சரி தீர்க்கமாக திருப்தி அடைவதில்லை.

சாலச்சிறந்த ஞானியான சாலொமோன் மனித இயல்பைப் பற்றி தன்னுடைய இயல்பான முறையில் சொல்லும் போது மனுஷன்படும் பிரயாசமெல்லாம் அவன் வாய்க்காகத்தானே; அவன் மனதுக்கோ திருப்தியில்லை என்று சொல்கிறார். அதுமட்டுமல்ல, காண்கிறதினால் கண் திருப்தியாகிறதில்லை. கேட்கிறதினால் செவி நிரப்பப்படுகிறதுமில்லை என்றும் பிரசங்கி 1:8 ல் நாம் வாசிக்கிறோம். திருப்தியின்மை என்பது தொன்று தொட்டே மனிதனை தொற்றிக்கொண்டிருக்கும் ஒரு வியாதியாக இருந்தாலும் கூட, எப்போதும் இணையத்தில் இணைந் திருக்கும் இளையதலை முறையினரிடம் இந்த வியாதி அதிகமாக வியாபித்திருக்கிறது. அது ஒருபுறமிருக்கட்டும், உலகத்தின் மக்களிடமிருந்து மாறுபட்டிருக்க வேண்டிய கிறிஸ்தவர்களும்

கூட பல சந்தர்ப்பங்களில் தேவனிடமிருந்து எத்தனையோ ஆசீர்வாதங்களைப் பெற்றிருந்தும் அத்தனையையும் மொத்தமாக மறந்து விட்டு ஒன்றுமேயில்லாதவர்கள் போல் திருப்தியற்ற வாழ்க்கையை வாழ்வது தேவனுக்கு பிரியமாயிருக்குமோ? நம்முடைய அபிலாசைகளும், அபேட்சைகளும் நிறைவேற வில்லை என்பதற்காக தேவனை குறை கூறுவது முறை யாகுமோ?

### I போதுமென்கிற மனதுடனே இருப்பதற்கான இரகசியம்

இவ்வுலகில் யாராவது ஒருவர் ஒரு குறிப்பிட்ட காரியத்தை பெற்றுக் கொள்வதற்கான இரகசியத்தை உங்களுக்கு சொல்லப் போகிறேன் என்றால் எல்லோரும் அது என்னவென்று உற்றுக் கவனிப்பார்கள். அப்போஸ்தலனாகிய பவுல் [பிலிப்பியர் 4:11,12] வசனங்களில் நாம் கிறிஸ்துவ வாழ்க்கையில் போதுமென்கிற மனதுடனே அல்லது மனரம்மியமாக இருப்பதற்கான இரகசியங்களை வெளிப்படுத்தியிருக்கிறார். என் குறைச்சலினால் நான் இப்படிச் சொல்லுகிறதில்லை; ஏனெனில் நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக் கொண்டேன். தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும், வாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும்; எவ்விடத்திலும் எல்லோரிடத்திலும் திருப்தியாயிருக்கவும், பட்டினியாயிருக்கவும், பரிபூரணமடையவும், குறைவுபடவும் போதிக்கப்பட்டேன். இங்கே நம் கவனத்தை ஈர்க்கும் ஒரு கருத்து என்னவென்றால், பவுல் தான் திருப்தியாயிருக்க அல்லது போதுமென்கிற மனதுடனே இருக்கப் போதிக்கப்பட்டதாகச் சொல்கிறார். வேறுவிதமாகச் சொன்னால், பவுல் தான் திருப்தியாயிருக்க கற்றுக் கொண்டதாகச் சொல்கிறார். பொதுவாக மனிதனுக்கு திருப்தி என்பது இயற்கையாகவே அவனிடத்தில் அமைந்துள்ள ஒன்றாக இல்லை. மாறாக, அது கற்றுக்கொள்கின்ற ஒன்றாகவே உள்ளது. பிரியமானவர்களே, பவுல் கிறிஸ்தவ வாழ்க்கையில் பல துயரங்களை கடந்து தான் சிகரத்தைத் தொட்டார். அவர் பட்டபாடுகளை II கொரிந்தியர் 11 ஆம் அதிகாரத்தில் பட்டியலிட்டிருக்கிறார். அப்பாடுகளில் ஒரு சதவீதத்தைக்கூட நாம் அனுபவித்திருக்கமாட்டோம்.

நாம் கிறிஸ்தவ வாழ்க்கையில் சங்கீதம் 23 ல் பார்ப்பது போல் கர்த்தரை மேய்ப்பாராகக் கொண்டு புல்லுள்ள இடங்களில்

மேய்க்கப்பட்டு, அமர்ந்த தண்ணீர்கள் அண்டையில் கொண்டுபோய் விடப்படுகிறோம். ஆனால், உலக வாழ்க்கை பச்சைப்பசேல் என்று தெரிவதால் ஆவிக்குரிய வாழ்க்கையை துச்சமாக நினைத்து திருப்தியின்மை என்னும் வலையில் விழுந்து நிலை குலைந்து போகிறோம். நாம் தேவனால் ஆச்சரியமாக நடத்தப்பட்டாலும் கூட, பல சந்தர்ப்பங்களில் திருப்தியில்லாமல் அவருக்கு விரோதமாக முறுமுறுக்கிறோம். எனவேதான், பணப்பிரியன் பணத்தினால் திருப்தியடைவதில்லை, செல்வப்பிரியன் செல்வத்தினால் திருப்தியடைவதில்லை என்று பிரசங்கி 5:10 ல் வாசிக்கிறோம்.

II **போதுமென்கிற மனதுடனே இருக்க நன்றியுணர்வை வளர்த்துக் கொள்ள வேண்டும்.**

சஞ்சலமும் சச்சரவும் நிறைந்த இவ்வுலகில் நண்றியுணர்வு குன்றிவிட்டது என்பதை நம் கண்களாலே காண முடியும். நன்றி எனும் வார்த்தை கிட்டத்தட்ட சொல் அக்ராதியில் இல்லாத வார்த்தைப் போல் ஆகிவிட்டது. நன்றியில்லாமை தொன்றுதொட்டே மனிதனிடம் காணப்படும் ஒரு மோசமான குணமாக இருக்கிறது. பழைய ஏற்பாட்டின் நாட்களில் எகிப்தின் அடிமைத் தனத்திலிருந்து இஸ்ரவேல் ஜனங்களை தேவன் அற்புத விதமாக வழிநடத்தின அந்த வனாந்திர யாத்திரையிலே புசிப்பதற்கு ருசியான ஆகாரத்தையும், மதுரமான தண்ணீரையும் கொடுத்து இகபர நன்மைகளால் நிறைத்து சுகமாய் வழிநடத்தின விதத்தை எல்லாம் மறந்து, நன்றி கெட்டவர்களாக தேவனுக்கு விரோதமாக முறுமுறுத்து பாவம் செய்தார்கள். அதேபோல், புதிய ஏற்பாட்டில் லூக்கா ஆசிரியர் 17 ஆம் அதிகாரத்தில் ஒரு சம்பவத்தைப் பதிவு செய்திருக்கிறார். அதென்னவென்றால், நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பத்து குஷ்டரோகிகளை சுகப்படுத்தினார். சுகம் பெற்றவர்களில் ஒருவன் மாத்திரம் திரும்பி வந்து அருடைய பாதத்தருகே முகங்குப்புற விழுந்து? அவருக்கு ஸ்தோத்திஞ் செலுத்தினான். அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்து தேவனுடைய சித்தமாயிருக்கிறது (I தெசலோனிக்கேயர் 5:18). எனவே, தேவனுடைய மற்ற கட்டளைகளுக்கு எப்படி நாம் முக்கியத்துவம் கொடுத்து அவைகளைக் கைக் கொள்வோமோ அதே போல் இக்கட்டளைக்கும் முக்கியத்துவம் கொடுத்து அதை நாம் கைக் கொள்ள வேண்டும்.

நம் சத்துரு சாத்தான் பல சந்தர்ப்பங்களில் தேவனுடைய பிள்ளைகளாகிய நம்மிடம் அதிகமான பணமிருந்தால் தான் ஆனந்தமாக, திருப்தியாக வாழ முடியுமென்று ஆசை வார்த்தைகளைக்கூறி நம்மை வஞ்சித்துவிடுகிறான். உண்மையில் பார்த்தால், அவ்வார்த்தைகளில் துளி அளவும் உண்மையில்லை. ஏனென்றால், இவ்வுலகத்தின் மக்களில் பலர் பெரும்பணக்காரர்களாக இருந்தாலும் கூட திருப்தியில்லாத வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருப்பதை நாம் கண்டு வருகிறோம். எனவே, குறைவான வருமானத்திலும் நிறைவான வாழ்வை வாழ்வது நாம் தேவனோடு கொண்டிருக்கும் உறவை அடிப்படையாகக் கொண்டு அமையும். சஞ்சலத்தோடு கூடிய அதிகப் பொருளிலும், கர்த்தரைப்பற்றும் பயத்தோடு கூடிய கொஞ்ச பொருளே உத்தமம் [நீதிமொழிகள் 15:16].

பிரியமான தேவனுடைய பிள்ளைகளே! தேவவாக்கியத்தின் படி மிகுந்த ஆதாயமாக கருதப்படுவது ஆஸ்திகளோ, ஆடம்பர பவனங்களோ அல்ல, போதுமென்கிற மனதுடனேகூடிய தேவபக்தியே என்பது தெள்ளத்தெளிவாகிறது. எனவே, நாம் தேவபக்தியுள்ள வாழ்க்கையை வாழ வாஞ்சிக்க வேண்டும். தேவ பக்தி எந்த அளவு பிரயோஜனமானது என்பதைப்பற்றி [I தீமோத்தேயு 4:8] ல் நாம் வாசிக்க முடியும். சரீர முயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது. தேவ பக்தியானது இந்த ஜீவனுக்கும், இதற்குப் பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளதாகையால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது. இவ்வசனத்தில் தேவ பக்தி என்பது தேவனிடம் பக்தியாயிருந்து, அவருக்கு பிரியமான வாழ்க்கை முறையை கொண்டிருப்பதாகும். தேவ பக்தியாக நாம் வாழும் போது இவ்வுலகில் நம் தேவைகள் சந்திக்கப்படுவது மட்டுமல்ல, அவ்வுலகிலும் தேவனைச் சந்திக்கும் தருணம் நமக்கு தரப்படும். ஆகவே, பொருளாசை நிறைந்த பொல்லாத உலகில் பொய்யுரையாத தேவன் நமக்கு எவைகளை தந்திருக்கிறாரோ அவைகளில் திருப்தியாயிருக்க கற்றுக் கொள்வோம். பேராசையை வேரோடு அகற்றுவோம். சர்வ வல்ல தேவன் நமக்கு இவ்வுலகிலும், அவ்வுலகிலும் சமாதானத்தையும், சந்தோஷத்தையும், தந்தருளுவாராக ஆமென்!!

# நீங்கள் அமர்ந்திருந்து நானே தேவன் என்று அறிந்து கொள்ளுங்கள்

Bro. **பாண்டியன்**

**ஆ**ண்டவர் இயேசுவின் நாமத்தில் உங்களுக்கு சமாதானம். மேற்கண்ட தலைப்பு சங் 46:10ல் வாசிக்கமுடியும் ''அமர்ந்திருந்து'' என்ற வார்த்தை பிரச்சனை, கஷ்டங்கள் மத்தியில் பதட்டப்படாதிரு, பயப்படாதிரு, கலங்காதிரு, அவசரப்படாதே போன்ற பல்வேறு அர்த்தங்களை உள்ளடக்கியதாக உள்ளது. ஆம், நம் தேவன் நம்மோடிருக்கிறார் என்றும், நமக்கு அவரே உயர்ந்த உணர்வு அடைக்கலமானவர் என்ற உண்டாகும்போது, நம்முடைய பிரச்சனை ஆபத்துக்களில் நாம் அமைதியாய் இருக்க முடியும். பொதுவாக இக்கட்டான சூழ்நிலைகளில் நாம் எரிச்சலும், கோபமும், ஏமாற்றம் மற்றும் பயம் போன்ற உணர்ச்சிகளால் அலைக்கழிக்கப் படுகிறோம்.

இப்படியாக நாம் இருப்பதை நம் தேவன் விரும்புவதில்லை. மாறாக, பிசாசு அப்படி விரும்புகிறான். பொதுவாக, மனிதன் பயந்து சாக வேண்டும் அல்லது மேட்டிமையில் அழிந்து போக வேண்டும் என்பதே அவனுடைய மாபெரும் திட்டமாக உள்ளது. வசதியிருந்தும் தேவனுக்கு பயந்து நடந்த யோபுவை சோதித்ததும் அவன்தான்; நம்பிக்கையில் சிறந்த தாவீதை மேட்டிமை அடையச்செய்து ஜனங்களை இலக்கம் பார்க்கத் தூண்டியதும் அவனேதான் (2 சாமு24:1). ஆனால், நாம் தேவனுக்கு சொந்த ஜனங்களும், அவர் மேய்ச்சலின் ஆடுகளுமாய் இருப்பதால் அவருடைய சத்தத்திற்குச் செவி கொடுக்கும்போது பதட்டப்படாமல் அமைதலாய் இருக்க முடியும்.

எனக்கன்பான தேவபிள்ளையே! உபத்திரவங்களில் பொறுமை யாய் இருக்க நாம் போதிக்கப்பட்டிருக்கிறோம். விசேஷமாய் இன்றைய கொரோனா வியாதியின் மத்தியில் நம்முடைய வாழ்வாதாரங்கள் பாதிக்கப்பட்டுள்ளது. பயங்களும், கட்டுப்பாடு களும் நம்மை இக்கட்டுகளுக்கு ஆளாக்கியுள்ளது. இந்த சூழ்நிலையில் நாம் ஆராதிக்கும் தேவன் நம்மை எல்லா சூழலிலும் தப்புவிக்க வல்லவராய் இருக்கிறார் என்று சபையில் நாம் கேள்விப்பட்டதை வாழ்வில் உணர்ந்து பார்க்கும் நேரம் இது! உலகஞானம் நோய் எதிர்ப்பு சக்தியைப்பற்றி பேசிக் கொண்டிருக்கிறது. நாம் அந்த சக்தியையே அளிக்க வல்ல

தேவனிடம் (ஏசா 40:29) கொள்ள வேண்டிய விசுவாசத்தைப் பற்றி பேச வேண்டிய நேரமிது!

நோய் எதிர்ப்பு சக்திக்கு சில உணவுப் பொருட்களையும், மருந்து மாத்திரைகளையும் எடுத்துக் கொள்ள ஆலோசனைகள் தரப் படுகிறது. அதுபோல, நம் விசுவாசம் அதிகரிக்க நமக்கு சபை கூடுதல், பிரசங்கம் கேட்பது, வேதவாசிப்பு, தியானம், ஆவிக்குரிய கட்டுரைகளை படிப்பது மற்றும் ஜெபிப்பது போன்ற அவசியமான காரியங்கள் நமக்குத் தேவைப்படுகிறது. நமதாண்டவர் இயேசு நூற்றுக்கதிபதி மற்றும் கானானிய ஸ்திரீயின் விசுவாசத்தை பாராட்டியதை நாம் இந்த வேளையில் நினைவு கூர வேண்டும். நமக்கு எந்த நோய்த்தொற்றும் வரக்கூடாது என்பதே நமது விருப்பம். அது நிறைவேற நமக்கு விசுவாசம் அவசியம். மகளே! திடன் கொள் உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது (மத்9:22) என்பது இன்றைக்கும் இருக்கக்கூடிய அநேக வைத்தியர்களால் கூடாத சுகத்தை தந்த இயேசு சொன்ன வார்த்தைகள்.

அப்படிப்போல, உரிமையில்லாத கானானிய ஸ்திரீயிடம், ''ஸ்திரீயே உன் விசுவாசம் பெரியது; நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது'' என்றார். எனவே, நாம் விரும்புகிறபடி நமக்கு நோய் தொற்று வராதிருக்க நம் விசுவாசம் பெரியதாய் இருக்கிறதா? சிந்தியுங்கள். இல்லையென்றால், ''என் அவிசுவாசம் நீங்கும்படி உதவிச் செய்யும்'' என்று கண்ணீரோடே நாம் ஜெபிக்க வேண்டியவர் களாய் இருக்கிறோம் (மாற்கு 9:24). இன்றைய காலத்தில் மனுஷர் எவ்வளவு ஞானம் இருந்தும் கொரோனா வியாதிக்கு மருந்து கண்டுபிடிக்க முடியாமல் வெட்கிக் கலங்கி, நாணமடைந்து அழிந்து போவதற்குக் காரணம் வேதம் சொல்கிறது. (சங்.83:17,18.) யேகோவா என்னும் நாமத்தையுடைய தேவரீர் ஒருவரே பூமி யனைத்தின் மேலும், உன்னதமானவர் என்று மனுஷர் உணரும் படி, அவர்கள் என்றைக்கும் வெட்கிங் கலங்கி, ஞானமடைந்து அழிந்து போவார்களாக.

அந்த தேவனை வெளிப்படுத்திய தேவக்குமாரனாகிய இயேசுவை மனுக்குலம் இன்று புறக்கணிக்கின்றது. ஐசுவரியம், பெலன், ஞானம், இவைகளில் மேன்மை பாராட்டுகிறது. வேதம் சொல்கிறது பூமியிலே கிருபையையும், நீதி நியாயத்தையும் செய்கிற தேவன் நான்'' என்று. என்னை அறிந்து உணர்ந்திருக்கிறதைக் குறித்தே மேன்மை பாராட்ட வேண்டும் (எரே 9:23,24) அப்போது தான் நாம் எச்சூழ்நிலையிலும் பதட்டபடாமல் அமைதியாக இருக்க முடியும். விசுவாசிக்கிறவன் பதறான் என்ற வேத வசனத்தை நம் வாழ்வில் நிறைவேற்ற தேவன் நம் அனைவருக்கும் கிருபை பாராட்டுவாராக. ஆமென்!! ✝

# சந்தோஷமும் - சஞ்சலமும் - நம் கையில்

Bro. K. M. *பிலிப்*

அன்பானவர்களே! நல்மீட்பர் இயேசுவின் இன்ப நாமத்தில் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்த கொடூரமான கொரோனாவின் பிடியில் சிக்கித்தவித்து உலகமே சந்தோஷத்தை இழந்து சஞ்சலத்தோடு சஞ்சரித்துக் கொண்டிருக்கிறது. மரண பயத்தில் மனிதர்கள் திகைத்து நிற்கிறார்கள். இச்சூழலில் தேவ ஜனமாகிய நம் நிலை என்ன? என்பதை அறிந்தால் அதுவே நமக்கு பெலன். அது நம் பயத்தைப் போக்கும்; தைரியத்தைக் கொடுக்கும்; சஞ்சலத்தை நீக்கும்; சந்தோஷத்தைக் கொடுக்கும். இந்நிலையை தேவ ஆலோசனை மட்டுமே கொடுக்க முடியும். தயவு செய்து நம் கவனத்தை தேவ ஆலோசனைக்குள்ளாக ஒருமுகப்படுத்துவோம்; முகத்தில் பிரகாசத்தைக் காண்போம்.

நமக்கு வாழ்வைக் கொடுத்தவர் பிதாவாகிய தேவன். ''தோளையும், சதையையும் எனக்குத் தரித்து, எலும்புகளாலும், நரம்புகளாலும் என்னை இசைத்தீர். எனக்கு ஜீவனைத் தந்ததும் அல்லாமலும், தயவையும் எனக்குப் பாராட்டினீர். உம்முடைய பராமரிப்பு என் ஆவியைக் காப்பாற்றினது'' (யோபு10:11,12). அந்த வாழ்வு எப்படி இருக்க வேண்டுமென்று திட்டமிட்டவரும் தேவனே. ''அன்றியும் மனுஷர் யாவரும் புசித்துக் குடித்துத் தங்கள் சகலப் பிரயாசத்தின் பலனையும் அனுபவிப்பது தேவனுடைய அநுக்கிரகம்த'' (பிர 3:13). மேலும், ''எப்பொழுதும் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாய் இருப்பதே உங்களுடைய பெலன்'' (நெகே 8:10) என்பதுமே தேவ திட்டமுமாகும். தன் திட்டம் நிறைவேற தேவன் தன் பங்குக்கு செய்ய வேண்டியதெல்லாம் செய்துவிட்டார். ''பிரியமானவனே,.... நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிரு,'' என்று ஆசீர்வதிக்கிறார். இந்த ஆசீர்வாதம் நிறைவேற எப்பொழுதும் துணையாயிருக்கிறார். (சங் 63:7) மகிழ்ச்சியை அநுபவிக்க அநுகிரகம் (அனுமதி) அளிக்கிறார். (பிர : 3:12) நன்மையான எந்த ஈவையும் பரத்திலிருந்து கொடுக்கிறார். (யாக் 1:17) சகலமும் நன்மைக்கேதுவாக நடத்துகிறார் (ரோ:8:28) எல்லாவற்றையும் அநுபவிக்க அதிகாரமளித்து உற்சாகப் படுத்துகிறார் (பிர 5:19). இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நம்மோடு கூடவே இருக்கும்படியாய்த் தன்

குமாரனையே கொடுத்திருக்கிறார். குமாரன், பரிசுத்த ஆவியானவர் மூலம், ''உலகத்தில் உள்ளவனிலும் உங்களில் இருப்பவர் பெரியவர் என்பதை உறுதிபடுத்தியிருக்கிறார் (I யோவான் 4:41). இம்மாபெரும் வாய்ப்புகள் நமக்கு கிடைத்தும் இவைகளைப் பிடித்துக்கொண்டு சந்தோஷமாய் இருப்பதும், அசட்டை செய்து சஞ்சலமாய் இருப்பதும் யார் கையில் இருக்கிறது? சிந்திப்போமா?

**III** யோவான் -2ல் பிரியமான நீ உன் ஆத்துமாவில் வாழ்வது போல்.... ஆம் ஒருவனுடைய சந்தோஷமும், சஞ்சலமும் அவன் இருதயத்தை (ஆத்துமாவை) பொருத்ததே. நம் இருதயம் எப்படிப்பட்டது? அது துராலோசனையை பிணைக்கும் இருதயம் (நீதி.6:18). மனுபுத்திரன் இருதயம் பொல்லாப்பைச் செய்யத் துணிகரம் கொள்கிறது (பிர 8:11). இருதயத்திலிருந்து பொல்லாத சிந்தனைகளும், கொலை பாதகங்களும், விபச்சாரங்களும், வேறு சிந்தனைகளும், கனவுகளும், பொய்சாட்சிகளும், தூஷணங்களும் புறப்பட்டு வந்து மனுஷனை தீட்டுப்படுத்தி, (மத் 15:18) சந்தோஷத்தைக் கெடுக்கும். தேவனுடைய இருதயத்திற்கு ஏற்றவனாய் பரிசுத்தமாய் வாழ்ந்தவரைக்கும் தாவீதின் வாழ்க்கையில் எப்பொழுதும் சந்தோஷமே. ''நான் உயிரோடிருக்கும் மட்டும் என் கர்த்தரைப் பாடுவேன்..... நான் அவரைத் தியானிக்கும் தியானம் இனிதாய் இருக்கும். நான் கர்த்தருக்குள் மகிழ்வேன்'' (சங் 104:33,34). ஆனால், இதே தாவீது தன் இருதயத்தை பாவத்தை நோக்கித் திருப்பினான்: பத்சேபாளிடத்தில் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து தன் பரிசுத்தத்தை இழந்து போனான் (II சாமு 11). இப்பொழுது பயம் பற்றிக்கொண்டது. புலம்பல் புரட்டி எடுத்தது. ''என் பாவத்தினால் என் எலும்புகளில் சவுக்கியமில்லை. என் அக்கிரமங்கள் என் தலைக்கு மேலாக பெருகிற்று, அவைகள் பாரச்சுமையைப் போல என்னால் தாங்கக்கூடாத பாரமாயிற்று. நான் வேதனைப்பட்டு ஒடுங்கினேன். நாள் முழுவதும் துக்கப்பட்டுத் திரிகிறேன். என் குடல்கள் எரிபந்தமாய் எரிகிறது. என் இருதயத்தின் கொந்தளிப்பினால் கதறுகிறேன்'' (சங் 38:3-8). என்று புலமினான். இந்நிலை தாவீதுக்கு தேவையா? பரிசுத்த வாழ்க்கை சந்தோஷத்தைக் கொடுத்தது. ஆனால் பாவமோ, பயத்தையும், சஞ்சலத்தையும் கொடுத்தது. இப்பொழுதும் தாவீது தன் நிலையை உணர்ந்தான்; மண்டியிட்டான், என் மீறுதல்களை நான் அறிந்திருக்கிறேன்.

என் பாவம் எப்பொழுதும் எனக்கு முன்பாக நிற்கிறது. நீர் என்னை ஈசோப்பினால் சுத்திகரியும். அப்பொழுது நான் சுத்தமாவேன்.... தேவனே சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும்'' என்று மன்றாடினான் [சங் 51:3,7,10] இப்பொழுது அவன் இருதயம் கழுவப்பட்டது. பரிசுத்த வாழ்க்கையை மீண்டும் பெற்ற தாவீது'' உற்சாகத்துடன் நான் உமக்கு பலியிடுவேன். கர்த்தாவே உமது நாமத்தைத் துதிப்பேன். அது நலமானது'' என்று கெம்பீரிப்பதை காண்கிறோம். அன்பானவர்ளே, பாவமான யாவற்றையும் நம் இருதயத்தை விட்டு அகற்றுவோம். ''உங்களில் ஞான இருதயமுள்ள அனைவரும் வந்து கர்த்தர் கட்டளையிட்டவைகளையெல்லாம் செய்வார்களாக [யாத். 35:10] என்று மோசே இஸ்ரவேலுக்கு ஆலோசனை சொன்னது போல் தேவன் நமக்கு கொடுத்த பொறுப்புகளாலேயே நம் இருதயத்தை ஞானமாய் செலுத்துவோம். ஏனெனில், சந்தோஷமும் நம்முடைய இருதயத்தைப் பொருத்துத் தான் இருக்கிறது.

பல சமயங்களில் நம்முடைய சந்தோஷமும், சஞ்சலமுமான வாழ்க்கைக்கு சூழ்நிலையால் விலங்கிடப்படுகிறோம். என்னுடைய இந்நிலைக்குக் காரணம் உடல்நலக்கோளாறு, பொருளாதாரம், இசைவற்ற திருமண வாழ்க்கை, இருதயத்தை உடைக்கம் பிள்ளைகள், மன இறுக்கம் கொடுக்கும் உறவுகள், சமரசமற்ற சமுதாயம் என்று சுற்றுக்சூழல்களை சுட்டிக்காட்டுகிறோம். உண்மையில், நம்மிடம் தெளிவான சிந்தனை இல்லாததே காரணம். சூழ்நிலைகள் எப்பொழுதும் நம்மைச் சுற்றி இருந்து கொண்டே தான் இருக்கும்; அலைகள் எழும்பியபோதும். இவைகளின் மத்தியில் தான் பேதுருவால் கடலின் மேல் நடக்க முடிந்தது [மத்–14:23] காரணம் அவனுடைய பார்வை இயேசுவின் மேல் மட்டும் இருந்தது. எப்பொழுது அவன் தன் பார்வையை வேறுபக்கம் திருப்பினானோ அப்பொழுதே கடலில் அமிழ ஆரம்பித்தான். அன்பான தேவ ஜனமே, நம்முடைய விசுவாசக் கண்கள் தேவனையே நோக்கி இருக்க வேண்டும். தேவனை நம்பியிருக்கிறேன் நான் பயப்படேன். மனுஷன் எனக்கு என்ன செய்வான் [சங் 56:11] என்று தைரியப்பட வேண்டும். நீ பயப்படாதே நான் உன்னுடனே இருக்கிறேன். திகையாதே, நான் உன் தேவன். நான் உன்னை பலப்படுத்தி உனக்குச் சகாயம் பண்ணுவேன். [ ஏசா.41:10]. என் நீதியின் வலது கரத்தினால் உன்னை தாங்குவேன் என்ற தேவனுடைய வாக்குகளைப் பற்றிக் கொள்வோம். கர்த்தர் என் பட்சத்தில் இருக்கிறார் நான் பயப்படேன் என்று உற்சாகமாய் சொல்வோம். சூழ்நிலைகளின் மீது நாட்டத்தைச் செலுத்தாமல் தேவ வார்த்தையை நாடுவோம்; தேடுவோம்; பிடித்துக் கொள்வோம்; அப்பொழுது, சிறைச்சாலையாக இருந்தாலும் பேதுருவைப் போல் அயர்ந்து தூங்க முடியும்

ஆதி திருச்சபைக்கு சுற்றுச்சூழல் கொடுத்த நெருக்கடியைப் பாருங்கள். அக்காலத்திலே எருசலேமிலுள்ள சபைக்கு மிகுந்த துன்பம் உண்டாயிற்று. யாவரும் யூதேயா, சமாரியா தேசங்களில் சிதறப்பட்டுப் போனார்கள். சவுல் சபையை பாழாக்கிக் கொண்டிருந்தான் (அப் 8:1-3). ஆனாலும், சபையார் துன்பத்தையும், தொல்லைகளையும் உருவாக்கினவர்களை பார்த்துக் கொண்ருக்கவில்லை. அச்சூழலிலும் சுவிசேஷ வசனத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டு அவற்றையே பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் சிதறி சீரழிந்து போகவில்லை. மாறாக, பெருகினார்கள். இதுவே சரித்திரம்.

அன்பானவர்களே! நம் தேவன் சூழ்நிலைகளுக்கும் மேலானவர். சகலமும் நன்மைக்கேதுவாய் நடக்கும் என்பதை விசுவாசிப்போம் (ரோமர்.8:28). இச்சூழ்நிலையில் பவுலை உற்றுக் கவனிப்போம். பவுல் தன் வாழ்நாளில் தனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியற்ற சூழ்நிலைகளையெல்லாம் மகிழ்ச்சிக்குரியதாக மாற்றிக் கொண்டார். சிறையில் இருந்து கொண்டு, கர்த்தருக்குள் எப்பொழுதும் மகிழ்ச்சியாய் இருங்கள் (பிலி 4:4) என்று மற்றவர்களை உற்சாகப்படுத்தின ( அப் 16 : 16 - 34 ல் ரோமப் பேரரசு பவுலையும், சீலாவையும் தவறாக சிறையில் அடைத்து விட்டனர். சிறையிலே அவர்களின் கால்கள் கட்டப்பட்டிருந்தன. ஆனால், அவர்களுடைய வாய்கள் கட்டப்படவில்லை. அவர்கள் ஜெபம் பண்ணி தேவனை துதித்துப் பாடினார்கள். உள்ளத்தில் பயமில்லை. தேவனால் சிறைக்கதவுகள் திறவுண்ட போதும் விலங்குகள் தறிப்பிக்கப்பட்ட போதும் தப்பித்துச் செல்லாமல், அங்கு செயல் ஒன்று உண்டு என்பதை உணர்ந்தார்கள். சிறைக்காவலனும் அவன் குடும்பமும் இரட்சிக்கப்படும்படியான மகத்தான நன்மையைச் செய்தார்கள். இந்த நன்மை சிறைக்காவலனது குடும்பத்தாருக்கும், பவுல், சீலாவுக்கும், பரலோகத்திற்கும் மிகுந்த சந்தோஷத்தை ஏற்படுத்தியது. ஆம், நாம் ஒரு போதும் சூழ்நிலைக்கைதி ஆகக் கூடாது. சகலமும் நன்மைக்கே என்று உணர்ந்தால் சந்தோஷம். தங்களுக்கு ஏற்பட்ட மோசமான சூழ்நிலைகளையும் நன்மைக்கேதுவாய் மாற்றிக் கொண்ட வேதாகமச் சாதனையாளர்கள் சிலரை கவனிப்போம்.

I: **ரூத் :** இளம் வயதில் கணவனை இழந்தாள். ஆனால் தேவன் மீது வைத்த நம்பிக்கையை இழக்கவில்லை. உம்முடைய தேவன் என்னுடைய தேவன் (1:16) என்பதில் உறுதியாய் இருந்து இயேசுக்கிறிஸ்துவின் வரலாற்றில் இடம் பெற்றாள் (மத் 1:5).

(II:**நெகேமியா**): அடிமை, ராஜாவுக்கு பானபாத்திரக்காரன். ஆனாலும், ஜெபத்தில் உறுதியாய் இருந்து ராஜாவின் துணையோடு எருசலேமின் அலங்கத்தை கட்டி முடித்தான். (நெகே1:4–11).

(III: **எஸ்தர்**): அநாதையாய், ஒரு பெண்ணாக இருந்தும் படைத்தளபதி ஆமானின் நெருக்கடிகளையெல்லாம் தேவன் மேல் வைத்த அசைக்க முடியாத விசுவாசத்தால் (4:16), (8:6) தகர்த்தெறிந்து ராணியாக வீற்றிருந்தாள்.

அன்பானவர்களே! நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது, அதினால் உமது பிரமாணங்களை கற்றுக் கொள்ளுகிறேன். உமது வேதம் என் மனமகிழ்ச்சியாய் இராதிருந்தால் என் துக்கத்திலே அமிழ்ந்து போயிருப்பேன். (சங் 119:71,92) என்ற மனநிலைக்கு வருவோம். இதுவே, நம் வாழ்க்கையில் சஞ்சலத்தைப் போக்கி சந்தோஷத்தைக் கொடுக்கும். கிறிஸ்து இயேசுவுக்குள்ளான உங்கள் அனைவருக்கும் சந்தோஷமும், சமாதானமும் உண்டாவதாக.ஆமென். ✝

## நாளும் நடப்பும்

- **ஒரே நாடு, ஒரே ரேஷன் திட்டம் இந்த ஆண்டு அமுல்படுத்தப்படும் - மத்திய அரசு**
- **இந்திய சீன எல்லைப்பகுதியில் தொடர்ந்து பதட்டம் நீடிக்கிறது.**
- **பள்ளிகள் மூலமாக நடத்தப்படும் ஆன்லைன் வகுப்புகளால் மாணவர்கள் மனதளவில் பாதிக்கப்படுகிறார்கள்.**
- **தென்மேற்கு பருவமழை நாடுமுழுவதும் தீவிரமடைந்திருப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி.**
- **உலகமுழுவதும் கொரோனா கொள்ளை நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை ஒரு கோடியைத் தாண்டியது.**